செ.வெ.எண். 34/ஜனவரி பத்திரிக்கை செய்தி தேதி : 20.01.2016

# வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தம் - 2016 இறுதி வாக்காளர் பட்டியல் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்.



- தருமபுரி மாவட்டத்தில் உள்ள 57.பாலக்கோடு, 58.பென்னாகரம், 59.தருமபுரி, 60.பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் 61.அரூர் (தனி) ஆகிய 5 சட்டமன்றத் தொகுதிகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியல் இன்று (20.01.2016) வெளியிடப்பட்டது.

- கடந்த 15.09.2015 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு 01.01.2016 அன்றைய தேதியை தகுதி நாளாகக் கொண்டு கடந்த 15.09.2015 முதல் 24.10.2015 வரை 18 வயது பூர்த்தியடைந்தோர் மற்றும் விடுபட்டவர்களிடமிருந்து வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பம் பெறப்பட்டது.

- அவை விசாரணை செய்யப்பட்டு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தும், ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் உள்ளவர்களில் இறந்தோர், குடிபெயர்ந்தோர் இருமுறை பதிவாளர்கள் ஆகிய இனங்களில் உள்ளவர்களை பெயர் நீக்கம் செய்தும், ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் உள்ளவர்களின் பதிவுகளில் திருத்தம் செய்யக் கோரி பெறப்பட்ட

விண்ணப்பங்களை விசாரணை செய்து திருத்தம் செய்யப்பட்டும் இறுதி வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

- **பெறப்பட்ட மனுக்கள், விசாரணை செய்யப்பட்டு ஏற்கப்பட்ட மனுக்கள் மற்றும் தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்களின் விபரங்கள் கீழ்வருமாறு :**

| **படிவம்** | **படிவம் 6** | **படிவம் 7** | **படிவம் 8** | **படிவம் 8ஏ** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| பெறப்பட்டவை | 39915 | 15290 | 6712 | 2901 | **64818** |
| ஏற்பு | 37616 | 15009 | 6419 | 2704 | **61748** |
| தள்ளுபடி | 2299 | 281 | 293 | 197 | **3070** |

- **நாளது தேதியில் வாக்காளர் பட்டியலில் உள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை :**

| **சட்டமன்றத் தொகுதி** | **ஆண்** | **பெண்** | **மற்றவர்கள்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| 57. பாலக்கோடு | 108694 | 102652 | 9 | 211355 |
| 58. பென்னாகரம் | 117529 | 108720 | 5 | 226254 |
| 59. தருமபுரி | 126909 | 123357 | 67 | 250333 |
| 60. பாப்பிரெட்டிப்பட்டி | 123283 | 119854 | 3 | 243140 |
| 61. அரூர் (தனி) | 114452 | 110773 | 6 | 225231 |
| **மொத்தம்** | **590867** | **565356** | **90** | **1156313** |

| சட்டமன்றத் தொகுதியின் எண் மற்றும் பெயர் | **15.09.2015 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் 2015 ன்படி** | | | | **நாளது தேதியில் உள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **ஆண்** | **பெண்** | **மூன்றாவது பாலினத்தவர்** | **மொத்தம்** | | **ஆண்** | **பெண்** | **மூன்றாவது பாலினத்தவர்** | **மொத்தம்** |
| 57. பாலக்கோடு | 106164 | 100105 | 5 | 206274 | | 108694 | 102652 | 9 | 211355 |
| 58. பென்னாகரம் | 115192 | 106767 | 0 | 221959 | | 117529 | 108720 | 5 | 226254 |
| 59. தருமபுரி | 124470 | 120916 | 65 | 245451 | | 126909 | 123357 | 67 | 250333 |
| 60. பாப்பிரெட்டிப்பட்டி | 121577 | 118070 | 2 | 239649 | | 123283 | 119854 | 3 | 243140 |
| 61. அரூர் (தனி) | 112752 | 108661 | 3 | 221416 | | 114452 | 110773 | 6 | 225231 |
| **மொத்தம்** | **580155** | **554519** | **75** | **1134749** | | **590867** | **565356** | **90** | **1156313** |

- **<u>வாக்காளர் அடையாள அட்டை வழங்குதல் :</u>**

இன்று 20.01.2016 வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியல் தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வருவாய் கோட்ட அலுவலங்கள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்படும். பொதுமக்கள் தங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளலாம். புதியதாக சேர்க்கப்பட்ட அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் அடையாள அட்டை வருகிற 25.01.2016 அன்று நடைபெற உள்ள தேசிய வாக்காளர் தின விழாவில் அந்தந்த வாக்குச்சாவடி மையத்திலேயே வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடத்தில் தெரிவித்தார்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.